[23rd October 1956

*287 *Q.*—SRI M. P. SUBRAMANIAM : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the Government received any complaint on 24th December 1955, 26th December 1955, 28th December 1955, 3rd January 1956, 20th January 1956, 21st January 1956, 28th January 1956, and 12th March 1956 from the public of abuse of the permit issued to Salem Co-operative Marketing Society for exporting chillies to Ceylon, by the president of the society;

(*b*) what those complaints are:

(*c*) who is the president of the marketing society; and

(*d*) what action the Government have taken on the complaints?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The Government received complaints, dated the 12th, 24th and 26th December 1955, the 3rd and 21st January and 12th and 29th March 1956.

(*b*) The complaints mainly related to alleged misuse of permits issued for export of chillies and the division of profit earned in the transaction among the office bearers of the Salem Co-operative Marketing Society and certain officials of the Co-operative department.

(*c*) Sri S. Arunachalam.

(*d*) The Registrar of Co-operative Societies has been asked to take departmental action against the persons responsible for irregularity.

SRI N. K. PALANISAMY : Sir, the bulk of chillies and onions is produced in the southern districts of our State. But the quota fixed for the last three years is very low when compared to West Bengal, which is not a surplus State in chillies and onions. May I know, Sir, why the quota is fixed so low when there is a surplus of chillies and onions in our State? Will the Government make representations to the Central Government to increase the quota allotted to Madras?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : This is a different question. But anyhow I shall answer. The Government are also interested in keeping down the prices of chillies that are consumed by the people in this State. Therefore, taking into account the fluctuating prices, the Government fix the quota from time to time.

SRI M. PALANIYANDI : நமது மாகாணத்தில் மிளகாய், வெங்காயம் அதிகமாக விளைந்தும்கூட, அவை நமது மாகாணத்திலிருந்து கல்கத்தாவுக்கு ஏற்றுமதியாகி, அங்கிருந்து வெளியிடங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதால், அங்குள்ள நடுத் தரகர்களுக்கு லாபம் கிடைக்கிறது. ஆனால், சென்னை ராஜ்யத்திலுள்ளவர்களுக்கு இவைகளை உற்பத்தி செய்வதினால் போதுமான விலை கிடைக்காமல் போய்விடுகிறது. ஆகவே, இங்கு உற்பத்தியாகும் மிளகாய், வெங்காயம் போன்ற பொருள்களை நாமே நேரடியாக ஏற்றுமதி செய்வதற்கு வேண்டிய பெர்மிட்களை அரசாங்கம் கொடுப்பதற்குவேண்டிய நடவடிக்கை எடுக்குமா என்று கேட்கிறேன்.

23rd October 1956]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதுபற்றி ஒரு தனி கேள்வி போட்டால் பதில் சொல்வேன்.

SRI M. KALYANASUNDARAM : சேலம் கூட்டுறவு மார்க்கெடிங் சொஸைடியைப்பற்றி வந்திருக்கக்கூடிய குற்றச்சாட்டுகளை விசாரித்து அந்த நிர்வாகிமீது தக்க நடவடிக்கை எடுப்பதற்காகவேண்டி ரிஜிஸ்திராருக்கு உத்தரவு பிறப்பித்திருப்பதாக மந்திரி அவர்கள் சொன்னார்கள். விசாரணை நடந்து கிட்டத்தட்ட ஏழு எட்டு மாதங்களுக்குமேல் இருக்குமென்று நினைக்கிறேன். அந்த நிர்வாகிகள் அப்படியே நிர்வாகத்தில்தான் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது தெரியவில்லை. ஆனால், அதற்குப்பதிலாக அந்த சொஸைடிலேயே இருக்கக்கூடிய சிப்பந்திகள் யார் யார் சர்க்கார் அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்தார்களோ அவர்கள்மீது சந்தேகப்பட்டு, அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கிற விசித்திரத்தைத்தான் பார்க்க முடிகிறது. ஆகவே, இதுவிஷயத்தில் சம்பந்தப்பட்டவர்கள்மீது தக்க நடவடிக்கையை உடனடியாக எடுப்பதற்கு அமைச்சரவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இலாகாவின் மூலம் விசாரணை நடத்துவதுடன், போலீஸ் விசாரணையும் நடத்தப்பட்டு வருகிறது. அதன் விவரங்கள் இப்பொழுது சொல்வதற்கில்லை. மற்ற விவரங்கள் பற்றி தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

SRI V. BALAKRISHNAN : நம்முடைய மாகாணத்து மிளகாய் அதிகம் உறைக்கிறபடியினால் இலங்கையர்கள் ஜப்பானிய மிளகாயை விரும்புகிறார்கள் என்று தெரியவருவதால், ஜப்பானிய மிளகாயை நம் ராஜ்யத்தில் பயிர் செய்வதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதுபற்றி எனக்கு விவரம் ஒன்றும் தெரியாது. கனம் அங்கத்தினர் மேலும் விவரங்கள் சொன்னால் அதைப்பற்றி விவசாய இலாகாவிலே பரிசீலனை செய்யலாம்.

SRI N. K. PALANISAMY : Sir, onions and chillies are exported through marketing societies. But the marketing societies are not directly exporting or selling the commodities. They are sending the commodities through private merchants who are pocketing an enormours amount of profit. Because of this the peasants have to suffer. People in Singapore and other places are getting South African onions and Egyptian onions at lower prices. Will the Government export direct to foreign countries these commodities under the supervision of the High Commissioner?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Hon. Member may put a separate question.

SRI M. P. SUBRAMANIAM : கூட்டுறவு சங்கத்தின்மீது புகார் ஏற்பட்டு சற்றேறக்குறைய 12, 13 மாதங்களுக்குமேல் ஆகிவிட்டன. விசாரணை துவங்கி 10, 12 மாதங்கள் ஆகியும் இன்னும் முடிவு ஏற்படாத காரணத்தால் அந்தக் கூட்டுறவு சங்கம், கடைசியாக வேலை செய்த ஒருவரை இப்பொழுது சஸ்பெண்டு செய்துகொண்டு, அவருக்கு யாரும் சாதகமாக சாட்சியம் சொல்லவில்லை என்ற காரணத்தால் நிர்வாகத்தார் உத்தியோகத்தில் இருந்துகொண்டு இருக்கிறார்கள். உத்தியோகத்தில் இருக்கிற காரணத்தால், அங்கே இருக்கக்கூடிய சாட்சிகளைக் கலைத்து தங்களுக்குச் சாதகமாக ஆக்கிக்கொள்கிறார்கள். ஆகவே அவர்கள் மீது எவ்வளவு சீக்கிரம் அரசாங்கம் நடவடிக்கை எடுப்பார்கள் என்று கேட்க விரும்புகிறேன். ஏற்கெனவே வேலையிலிருந்து இப்பொழுது சஸ்பெண்டு 11-20 a.m.

செய்யப்பட்டிருப்பவரை தற்காலிகமாக வேலைக்கு எடுத்துக்கொண்டு, உண்மையான ருசு கிடைத்தபிறகு அதற்குமேல் அந்தப் புகாரைப்பற்றி முடிவு செய்ய அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் இப்பொழுது கூறியதைக்கொண்டு மேலும் இதுபற்றி அரசாங்கம் கவனம் செலுத்தும்.

SRI P. RANGASWAMI REDDIAR : Is it a fact that in the first quarter of 1955, a permit to export 150 tons of chillies and 75 tons of onions was issued to the Salem Co-operative Marketing Society and is it a fact that instead of purchasing chillies and onions from the respective areas of operation by this society, they authorised the shipping merchants in Dindigul and Nagapattinam to export chillies to Ceylon and other places under the said permit which resulted in the Directors earning an illegal profit to the extent of Rs. 80,000?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I may tell the hon. Member that the whole matter is under enquiry.

SRI M. KALYANASUNDARAM : புகார்கள் பூராவும் விசாரணையில் இருக்கிறதென்று கனம் மந்திரி அவர்கள் சொன்னார்கள். உண்மையைக் கண்டுபிடிப்பதற்கு விசாரணை நடத்திடாகவேண்டும். நிர்வாகத்தில் இருப்பவர்கள் விசாரணை நடத்துவதால் சாட்சிகள் சாட்சியம் கொடுக்க பயப்படுகிறார்கள் என்று மந்திரி அவர்கள் கவனத்திற்கு கொண்டுவரப் பட்டிருக்கிறதா ? அப்படியானால் நிர்வாகஸ்தர்களை "சூப்பர்சீட்" செய்து விட்டு ஸ்பெஷல் ஆபீஸரை நியமிப்பதை சர்க்கார் ஆலோசிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்போது கனம் அங்கத்தினர் கூறியதை மனதில் வைத்துக்கொண்டு மேற்கொண்டு கவனம் செலுத்துகிறேன் என்று நான் சற்று முன்பு சொன்னேன். விசாரணை செய்வதிலே விசாரணை செய்கின்றவர்கள் எந்தெந்த வகையிலே நடவடிக்கை எடுத்துக்கொண்டால் சரிவர உண்மை புலப்படுமோ அதுபற்றியெல்லாம் கவனம் செலுத்தி விசாரணை நடத்தப்படும்.

District Rice and Flour Mill-Owners' Association, South Arcot district

* 288 *Q*.—SRI A. RATNAM : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether it is a fact that in 1955, the District Rice and Flour Mill-Owners' Association, South Arcot district, requested permission of the Government to start a co-operative society :

(*b*) if so, whether the permission has been granted; and

(*c*) if not, the reasons therefor?

THE HON. SRI A. B. SHETTY : (*a*) Yes, Sir.

(*b*) No, Sir.

(*c*) The reasons for not granting permission are as follows :—

(1) The Association will be able to collect a share capital of Rs. 20,000 only. It will not be able to attract local deposits to any appreciable extent to enable it to carry on its loan policy without depending on the Central Bank for the required financial assistance.